REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5563

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 28உ சனி (13—8—55) ★ ★ வெளியூர்: ஆடி 29உ ஞாயிறு (14—8—55) [இதழ் 52

'கட்டுப்படுத்த முடியாதவர்!'

கல்கத்தா, ஆக. 12—

'மேற்கு வங்க முதன் மந்திரியான டாக்டர் பி. சி. ராய் அவர்களை, சில சட்டசபை நடைமுறை விதிகளில், சபைத் தலைவர் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்' என்று, கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் ஒருவர் கோரினாராம்!

உடனே டாக்டர் பி. சி. ராய் எழுந்து, 'என்னைத் தவிர வேறு எவரும் என்னை கட்டுப்படுத்த முடியாது' என்று பலத்த சிரிப்புக்கிடையே கூறினாராம்

டாக்டர் ராய் சுமார் 6 அடி 3 அங்குலம் உயரமுள்ளவர் என்பது குறிப்பிடத்தகுந்தது.

கெஞ்சினர்! கெஞ்சினர்! கால்தொட்டு இறைஞ்சினர்!

மிஞ்சினர்! மிஞ்சினர்! முடிவுவரை மிஞ்சினர்!

ரூ. 400 கோடி திட்டம் ரூ. 165 கோடியாகிறது!

மக்கள் எண்ணிக்கைக்கேற்ப ரூ. 225 கோடியாக இருக்கட்டும்!

அதுவும் முடியாது என்கிறது திட்டக் குழு

சென்னை அமைச்சர்களின் விஜயத்தில் ஏற்பட்ட அபஜயம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்காக, சென்னை அரசாங்கம் உருவாக்கிய திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 393.7 கோடி.

இம்மதிப்பீட்டுத் தொகையில், சென்னை அரசாங்கத்தால் செயலாற்றப்பட வேண்டிய மத்திய அரசாங்கத்தின் நடைமுறை ஏற்பாடுகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளத் தொகையும் அடங்கியிருக்கிறது!

"சென்னை அரசாங்கத்தின் நம்பிக்கை நாசமுறும் நிலையில், ஆசை மண் கவ்வும் வகையில், ஊக்கம் தளர்ந்துவிடும் போக்கில், உள்ளம் உடைந்துவிடும் தன்மையில், இந்திய அரசாங்கத்தின் திட்டக் குழு, சென்னை அரசாங்கத்தின் இரண்டாவது திட்டத்தின் தொகையை 165 கோடி ரூபாயில் கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறது!

திட்டக்குழு விருப்பம் நிறைவேற விட்டுவிடுவார்களா நமது அமைச்சர்கள்? கெஞ்சினர்கள், கெஞ்சினர்கள்—திட்டக் குழுவின் தாள் தொட்டும்கூட கெஞ்சினர்கள்!

ஆனல், திட்டக் குழு உறுப்பினர்களோ, மிஞ்சினர்கள், மிஞ்சினர்கள்—நமது மந்திரிகளின் முகங்கள் கருகிச் சுருங்கும் வரையில் மிஞ்சினர்கள்!

முகம் கருகினலும், விழிகள் நீரைப் பெருக்கினலும், மனம் குழம்பினலும், சொற்கள் தடுமாறினலும், விதண்டாவாதத்திற்குப் பெயர்போன நமது கனம் சுப்பிரமணியமா அஞ்சிவிடுகிறவர்?—வாயைப் பொத்திக் கொண்டுவிடுபவர்? மீண்டும் தொண்டையை சரிப்படுத்திக்கொண்டு, சென்னை மாநிலத்தின் மக்கள் தொகையை முன்தள்ளி திட்டத்தை 225 கோடி ரூபாயளவிலாவது ஒப்புக்கொள்ள வேண்டும் என, திட்டக் குழுவிடம் மண்டியிட்டு வேண்டினர்!

முயற்சியும், மண்டியிட்ட மானக்கேடும்தான் மிச்சம்! சென்னை திட்டம், திட்டக் குழுவின், மந்தி கை மாலையாயிற்று!

குறிப்பிட்ட ஒரு மாநிலத்தின் மக்கள் தொகையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஒரு திட்டத்தின் அவசியத்தை உறுதி செய்யக்கூடாது எனக் கூறி, திட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் முக்கியத்துவம், அவைகளை வெற்றியாகச் செயலாற்றுவதற்குக் கிடைக்கக்கூடிய வசதிகள், ஆகிய இரண்டையும் கொண்டு திட்டத்தை வரையறுக்க வேண்டுமென திட்டக் குழு, கனம் சுப்பிரமணியத்தின் கண்ணீருக்கு சமாதானம் கூறிவிட்டது. திட்டத்தையும் 165 கோடி ரூபாய் அளவிற்குச் சிதைத்துவிட்டது!

கனம் சுப்பிரமணியத்தின் கூற்றுப்படி, இந்தியாவின் அரசியல் ஒற்றுமைக்கு, சென்னை இந்த விலை கொடுக்கவேண்டி இருக்கிறது!

போன கனங்கள் நாளையோ மறுதினமோ திரும்பும், சென்னைக்கு!—எதிர்பார்த்துக் கொண்டுபோன வெற்றியுடன் அல்ல! 'கீழே புரட்டிப் புரட்டி உதைத்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை—பார்!—என்ற வீரப்பிரதாபம், கனங்களால், சட்டசபையில் முழங்கப்படத்தான் போகிறது! நாமும் கேட்கத்தான் போகிறோம்!

(4-ம் பக்கம் பார்க்க)

'வருகிறது! வருகிறது!!' என்ற 'புலி' வந்தேவிட்டது!

சென்னை சர்க்கார் தயாரித்த திட்டம்

ரூ. 393 கோடி மதிப்புடையது

சென்னை சர்க்கார் வகுத்த ரூ. 393 கோடி பெறுமான இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பிரரேபனைகளின்படி சுமார் 1,23,720 தேர்ச்சி பெற்ற தொழிலாளருக்கும், 66,619 தேர்ச்சி பெறாத தொழிலாளருக்கும் வேலை வசதி கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டதாம்!

மேலும், 12,800 பேருக்கு குடிசைத் தொழில், மற்ற சிறு தொழில்கள் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டிருந்ததாம்.

பல்வேறு வகைப்பட்ட 20 தொழில்களில் $1\frac{1}{2}$ இலட்சம் பேருக்கு குறைநேர வேலை கிடைக்கலாம் என்றும், கதர் உற்பத்தித் திட்டங்களிலும் சுமார் 7 லட்சம் பேருக்கு வேலை கிடைக்கலாம் என்றும் கூட எதிர்பார்க்கப்பட்டதாம்!

★

தி.-கொ. திட்டம்

ரூ. 130 கோடி மதிப்புடையது

திரு-கொச்சி மாநில சர்க்கார் தயாரித்துள்ள இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் சுமார் ரூ. 130·7 கோடி மதிப்புடையது.

சுமார் 2,50,000 பேருக்குப் புதிதாக வேலை கிடைக்கும் என்றும், பற்றுக்குறையான வேலை பார்ப்பவரில் 5-லட்சம் பேருக்கு நிவாரணம் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தகவல்களை முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

இந்த திட்டம், மாநில திட்ட ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்பட்டு பரிசீலனைக்குப் பின்னர், அங்கீகாரத்திற்காக, திட்டக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்படும் என்று கூறப்படுகிறது.

★

பிகார் திட்டம்

ரூ. 600 கோடி மதிப்புடையது

பிகார் மாநில சர்க்கார் தயாரித்துள்ள இரண்டாம் திட்டம் ரூ. 600 கோடி என்று மதிப்பிடப்பட்டிருப்பதாக செய்தி வெளிவந்திருக்கிறது.

★

பம்பாய் திட்டம்

ரூ. 471 கோடி மதிப்புடையது

பம்பாய் மாநில சர்க்கார் தயாரித்துள்ள இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 471 கோடி மதிப்புடையது என்றும், அந்தத் திட்டத்தினை மந்திரி சபை ஏற்றுக்

(4-ம் பக்கம் பார்க்க.)

பொருளில் புதுமையும் இல்லை—மாற்றமும் இல்லை!

பழைய பல்லவியே! பழைய பிடிவாதமே!

இந்தித் திணிப்பு பற்றி இராசேந்திரப் பிரசாத் உரை

புதுடில்லி, ஆக. 12—

"இந்தி மொழி அல்லாத இதர வட்டார மொழி பேசும் மக்களுக்கு—குறிப்பாகத், தென்னட்டு மக்களுக்கு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்;

"இந்தியா முழுமைக்குமே பெருமை தரக்கூடிய வகையில், சில வட்டார மொழிகள் இலக்கிய வளர்ச்சியிலும், சிந்தனையிலும், ஒரு பெரும் பாரம்பரியத்தின் பிரதிநிதிகளாக விளங்குகின்றன;

"ஆங்கிலம் பெற்றுள்ள இடத்தில் அலுவல் மொழியாக வேறு ஒரு மொழியை மேற்கொள்ளுவது என்று முடிவு செய்யும்போதே, வட்டார மொழிகளின் வளர்ச்சிக்கு, நேரடியாகவோ, மறைமுகமாகவோ குந்தகம் விளையாதவாறு பார்த்துக்கொள்ள முடிந்த எல்லா கவலையும் எடுத்துக்கொள்ளப்பட்டது;

"அலுவல் மொழியாக, இந்தியின் உபயோகம் நன்கு வரையறுக்கப்பட்ட சில துறைகளுக்கு மட்டுமே உபயோகிக்கப்படும்; மற்றப்படி, வட்டார மொழிகள் அந்தந்த வட்டாரத்தில் முழுவதும் பயன்படுத்த அனுமதிக்கப்படும்;

"தாய் மொழி அல்லாத இதர வேறு ஒரு மொழியைக் கற்றுக்கொள்வதில் உள்ள சுமை, கஷ்டம், இந்தியாவில் உள்ள எல்லா மொழி பேசும் மக்களுக்கும் பொதுவானதாகும்;

"இந்தக் காரணத்தினல்தான், தாய் மொழியாகக், இந்தியை கொண்டவர்கள், வேறு ஏதாவது ஒரு மொழியை—குறிப்பாக, தென்னட்டு மொழிகளுள் ஒன்றைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கூறிவந்திருக்கிறேன்;

"இந்தி புரியாதவர்கள் இந்தியைக் கற்றுக்கொள்வதற்கு, போதுமான அவகாசம் தரவேண்டும் என்பதையும் ஒத்துக்கொள்ளத் தான் வேண்டும்;

"இந்தி பற்றி, இந்திய அரசியல் சட்டத்தில் கண்டிருப்பதை நாம் நிறைவேற்ற எல்லா வகையான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றலும்-எல்லோரும் இந்தி கற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான், இந்தி கற்றுக்கொள்வதற்கு ஏற்படும் கால அளவைக் காட்டிலும் முக்கியமானது என்பதை நான் கூறத் தேவை இல்லை,"

—என்று, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத், மத்திய கல்வி இலாகா ஏற்பாடு செய்துள்ள இந்தி கண்காட்சிசாலையைத் துவக்கும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நடைமுறை அவசியங்கள், ஒரு அகில இந்திய மொழி வேண்டுமென்ற எண்ணத்திற்கு நம்மைத் துரத்தக்கூடும்; அந்த எண்ணந்தான்—அரசியல் நிர்ணயசபையை, அகில இந்திய மொழியாக இந்தியை ஏற்றுக்கொள்ளுமாறு தூண்டியது;

"அந்த முடிவை செயல்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது; அப்படிச் செயல்படுத்தும்போது இந்திய மக்களின் நலன்களை நாம் மனதில் கொண்டாக வேண்டும்;

"இந்தி மொழி பேசுகிற மக்களுக்கு இலாபமும், இந்தி மொழி பேசாத மக்களுக்கு துயரமும் ஏற்படுகிற வகையில் இந்தியைத் திணிக்கும் நோக்கம் சர்க்காருக்கு இல்லை;

"மத்திய பணித் தேர்வுக் குழு அகில இந்திய உத்தியோகங்களுக்காக நடத்தும் பரீட்சைகளை இந்தி மொழியில் நடத்துமா என்பது தான், இந்தப் பிரச்சினையை ஒட்டி எழுப்பப்பட்ட மிகச் சிக்கலான கேள்வி;

"இந்தப் பரீட்சைகள் இந்தி மொழியில்தான் நடைபெற வேண்டும் என்பதற்கு நாம் ஊக்கமளிக்க வேண்டுமென்றலும்கூட, யாரேனும், ஆங்கிலத்திலோ, அல்லது, தங்கள் வட்டார மொழியிலேயோ தான் பரீட்சை எழுத விரும்பினல் அப்படி எழுதுவதற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும்; அவர்கள் பிற்பாடு, இந்தி மொழியில் ஒரு பரீட்சை எழுதியாக வேண்டும் என்பது, சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது."

மராதவாடா தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தைச் சேர்ந்த சுமார் 1,500 ஊழியர்கள், காங்கிரசில் சேர்ந்துவிடுவதென முடிவு செய்திருப்பதாக சம்மேளனத்தின் பிரபல தலைவர்கள் அறிவித்திருக்கின்றனராம்!

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 13—8—'55 சனி

கட்டுண்டோம்—காண்கிறோம்!

★

இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, இலங்கை வாழ் சிங்களவர் உள்ளத்தில் மட்டுமின்றி, இலங்கையிலும்—தென்னகத்திலும் வாழும் திராவிடர்களின் உள்ளங்களிலெல்லாம் நிறைந்த ஓர் மனிதராகி வருகிறார்; ஆமாம்! இலங்கை வாழ் திராவிடர், கொத்தலாவலையின் கொடுங்கோன்மைக்கு ஆளாக்கப்பட்டு, அனுபவித்து வரும் இன்னல்கள், திராவிடரின் உள்ளங்களில் அந்த மனிதருக்கு இடம் பிடித்துத் தருவனவாகத்தான் உள்ளன!

நாடற்றவர்கள் என்ற பட்டத்தை எண்ணற்ற திராவிடர்கள் தலையில் சூட்டி, அவர்களை அடித்துத் துரத்தும் கொடுமையைக் கண்டு, கட்டுண்டு கிடக்கும் திராவிடர்கள், கண்ணீர் விடுகின்றனர்—அவர்கள் உள்ளங்களில்கூட, கொத்தலாவலையின் உருவம் நிழலாடத்தான் செய்கிறது!

"இந்தியர்களான, 'நாடற்றோரை' போர்னியாவில் உள்ள பிரிட்டிஷாரின் தேயிலைத் தோட்டங்களுக்கு அனுப்பவேண்டும்; ஏனெனில் அவர்களை இந்தியாவோ இலங்கையோ ஏற்றுக் கொள்வதாயில்லை; இந்த இந்தியர்கள், 'நாடற்றவர்கள்' என்று கருதப்பட முடியாது; ஏனெனில், பிரிட்டிஷார் காலத்தில்தான், இந்தியாவிலிருந்து இவர்கள், இலங்கையில் உள்ள பிரிட்டிஷாருக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்ய அழைத்து வரப்பட்டனர்; ஆகவே, அவர்களை, பிரிட்டன் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ள வேண்டும்,"

என்று, சென்ற கிழமை, இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை குறிப்பிட்டிருக்கிறார்.

எப்படி இருக்கிறது பாருங்கள் யோசனை?

இங்கிருந்து திராவிடர்கள் இலங்கைக்குச் சென்று, காடு மேடுகளைத் திருத்தி கழனிகளாக்கி, மலைகளைத் தேயிலைத் தோட்டங்களாக்கி, இலங்கையை இன்றுள்ள நிலைக்கு உயர்த்தித் தந்தவர்களாயிற்றே என்ற நன்றி உள்ளம் சிறிதுமின்றி, அவர்களை ஆப்பிரிக்கக் காடுகளுக்கு அடித்துத் துரத்தி, ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கக் கூறுகிறார்—இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை!

"இலங்கையோ, இந்தியாவோ இவர்களை ஏற்றுக் கொள்ளாததால், இவர்கள் 'நாடற்றவர்கள்'" என்று கூறிடும் கொத்தலாவலை, அதே நாவினால், "இவர்களை 'நாடற்றவர்கள்' என்று கூறிட முடியாது," என வியாக்கியானம் தர முற்பட்டு, முரண்பட்டே பேசுகிறார்!

கொத்தலாவலை மட்டும்தானா இலங்கைத் திராவிடருக்குக் கொடுமை இழைப்பவர் என்றால், 'இந்திய சர்க்காரும், தங்கள் பங்கிற்குக் கொடுமைகளைப் புரிந்த வண்ணம்தான் உள்ளனர்' என்பதை, அவ்வப்போது நாம் எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

நாள்தோறும் கப்பலேறி, 'இந்திய'க் கரை சேர்ந்து, வாழ வழி தேடி கண்ணீர் வடிக்கும் இலங்கை இந்தியரின் பரிதாப நிலைபற்றியும், அவர்களுக்கு எதிராக இலங்கையில் நடைபெறும் விரோத பிரசாரம் பற்றியும் தொடர்ந்து செய்திகள் வந்தவண்ணமுள்ளன; ஆனால், காரியமாற்ற வேண்டிய பொறுப்பும், கடமையுமுடைய பண்டிதரோ, 'நிலைமை திருப்திகரமாயில்லை' என்று உதட்டைப் பிதுக்குவதுடன் நின்று விடுகிறார்!

என்ன செய்வது? தென்னாட்டு திராவிடர்கள், 'கட்டுண்டோம்! அதனால் இந்தக் கொடுமைகளை எல்லாம் காண்கிறோம்!' என்றெண்ணிக் கண்ணீர் வடிக்கின்றனர்!

இலங்கை வாழ் திராவிடர் படும்பாடு!

சலுகைகளை அமுல் செய்ய சர்க்கார் மறுக்கிறது

"இந்தியா—இலங்கை ஆகியவற்றிடையே உள்ள தகராறில் உள்ள மற்ற பிரச்சினைகளனைத்தும் தீர்ந்த பின்னர்தான், இந்தியக் குடியுரிமையை ஏற்க விரும்பும் 'நாடற்றவர்கள்' 55 வயதுவரையிலும் இலங்கையிலேயே தங்கியிருக்கும் அனுமதி தரும் பிரச்சினை பற்றி இலங்கை சர்க்கார் முடிவு செய்யும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

இலங்கையில் உள்ள 'நாடற்றவர்கள்' சிலர், இந்தியக் குடியுரிமையை ஏற்றுக் கொண்டால், 55-வது வயது வரையிலும் தாங்கள் இலங்கையில் தங்கியிருக்க அனுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன், இந்தியக் குடிமக்களாக அவர்கள் பதிவு செய்து கொள்ள முன்வந்தால், அவர்களுக்கு நீண்டகால குடியுரிமை பர்மிட்டுகள் கிடைக்குமா என்று, இந்தியத் தூதுவர் இலங்கை சர்க்காரைக் கேட்டதாகவும், அதற்குப் பதிலிக்கும் வகையிலேயே இலங்கை சர்க்கார் மேற்குறிப்பிட்ட பதிலைத் தந்துள்ளதாயும் கூறப்படுகிறது.

இலங்கை—இந்தியா ஒப்பந்தம் குறித்து விளக்கம் தரப்படாவிட்டால், அந்த ஒப்பந்தத்தையே 'புது முறை'யில் மதிப்பிட நேரிடுமென்றும், ஒப்பந்தம் பற்றி நேரு பண்டிதரின் பதில் வரும்வரை, அது சம்பந்தமாக எழுகின்ற எல்லாப் பிரச்சினைகளும் நிறுத்தி வைக்கப்படுமென்றும் இலங்கை சர்க்கார் தெரிவித்திருக்கிறதாம்.

இதனிடையே, 'இலங்கையில் நீண்டகாலம் வசிக்கக்கூடிய வசதி கிடைக்காது,' என்ற உண்மையைத் தெரிந்துகொள்ளாமல், தங்களை இந்தியக் குடிகளாகப் பதிவு செய்துகொள்ள வருகிறவர்களை, இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் தடுத்து நிறுத்தி, அவர்களை இந்தியர்களாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகளையும் நிறுத்தியிருக்கிறாராம்!

நாட்டின் நிர்மாண வேலைகளுக்கு......

இராணுவத்தினரை ஈடுபடுத்தலாமா?

தளபதி திம்மையா கருத்து

"நாட்டின் தற்காப்புக்குத் தேவையான குறைந்தபட்ச அளவுக்குத்தான் இந்தியாவில் இராணுவப் படைகள் இருக்கின்றன; அவர்களை, நாட்டின் புனர்நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது புத்திசாலித்தனமாகாது" என்று, தென் பிராந்திய இராணுவ தளபதி லெப்-ஜெனரல் கே. எஸ். திம்மையா பம்பாய் முற்போக்குக் குழுவில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு தொடர்ந்து பேசினார்:—

"இம்மாதிரி அவர்களை ஈடுபடுத்துவது இராணுவத் திறமையை பாதிக்கும்; இராணுவம் திறமையானதாக இருக்கவேண்டுமென்றால் அவர்கள் தொடர்ந்து பயிற்சி பெற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

"இராணுவத்தினர் வேறு வேலைகளைச் செய்யத் தகுதியற்றவர்கள் எனக் கூற இயலாது; அவர்களுக்கு நல்ல கட்டுப்பாடான பயிற்சி இருப்பதால், எந்த வெளி வேலையையும் திறமையுடன் செய்கிறார்கள்; ஆனால், இராணுவத்தினரை அடிக்கடி வேறு வேலைகளுக்கு அனுப்பும் பழக்கம் ஏற்படக்கூடாது; அப்படி அழைக்க வேண்டுமானால் இராணுவத்தில் இன்னும் அதிக ஆட்கள் இருக்க வேண்டும்; ஆனால், மிகப் பெரிய படையை வைத்துக்கொள்ள நமக்கு சக்தியில்லை.

"இம்மாதிரியான வேலைகளுக்கு, 'உள் நாட்டுப் படை' போன்றவைகளை நிறுவி, உதவி செய்யச் சொல்லலாம் வெளி நாடுகளில், இராணுவத்தினர், இதர வேலைகளைச் செய்யும்படி அழைக்கப்படுவதில்லை."

புதைத்துவைத்த பணம் மீட்பு!

லூதியானா, ஆக. 12—

பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னர், இங்கு முகம்மது லதீப் என்ற பெயருடைய ஒருவர் தமது வீட்டில் ரூ. 30 ஆயிரம் மதிப்புள்ள இந்திய ரூபாய் நோட்டுகளைப் புதைத்து வைத்திருந்தாராம். பின்னர், பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டதும், அவர் அப்புதையலை எடுக்காமலேயே பாகிஸ்தான் சென்றுவிட்டாராம்.

ஆனால் அண்மையில் ஏற்பட்ட பாகிஸ்தான்—இந்தியா ஒப்பந்தம் ஒன்றைப் பயன்படுத்திக்கொண்டு, அவர் இங்குள்ள தமது பழைய வீட்டிற்கு ஒரு போலீஸ் அதிகாரியுடன் வந்து, தாம் புதைத்துவைத்திருந்த குறிப்பிட்ட இடத்தைத் தோண்டி, அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டாராம்.

முன்னர் புதைத்துவிட்டுப் போன ரூபாய் நோட்டுகள் யாதொன்றுக்கும் கெடுதி ஏற்படாமல் அப்படியே இருந்தனவாம்.

அந்த வீட்டை அவர் காலி செய்துவிட்டுப் போன பின்னர், இப்போது சில அகதிகள் அங்கு தங்கியிருக்கின்றனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

பிரெஞ்சுப் படைகள் வெளியேறுகின்றன!

லிபியா—பிரான்ஸ் ஒப்பந்தம்

டிரிபோலி, ஆக. 11—

லிபியாவிலிருக்கின்ற பிரெஞ்சுப் படைகளை வெளியேற்ற வழிவகை செய்கின்ற லிபியா—பிரெஞ்சு ஒப்பந்தம் நட்புறவு முறையில் கையெழுத்திடப்பட்டுவிட்டதாம்.

அடுத்த 12 திங்களுக்குள், லிபியாவில் இருக்கும் 400 துருப்புகளைக் கொண்ட பிரெஞ்சுப் படைகள் திரும்பிப் பெற்றுக்கொள்ளப்படுமாம்.

விமான தளங்களும் லிபியா விடம் ஒப்படைக்கப்படுமாம்.

பிறந்த இடத்தின் இயல்பு மாறாமல் இயம்புகிறார் கோதாரி!

டி. டி. கே.-யின் வாதத்திற்குச் சப்பைக்கட்டு

தென்னாட்டுத் தொழில்களுக்காக வட நாட்டுத் தொழில்கள் பாதிக்கப்படக்கூடாதாம்

சென்னை, ஆக. 11—

"தொழில் அபிவிருத்தியில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது; இதற்கு, போதுமான கச்சாப் பொருள்கள் இல்லாதது ஒரு பெருங்குறையாகும்;

"தென்னாட்டில் எஞ்சினீயரிங் தொழில்கள் இல்லாமலிருப்பதற்குக் காரணம், எஃகும், நிலக்கரியும் இந்த நாட்டில் கிடைக்கவில்லை;

"நெய்வேலி, நமக்குத் தேவையான நிலக்கரியைத் தந்தால், நமக்குத் தேவைப்படும் எஃகினை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை துவங்க முடியும்;

தென்னாட்டுத் தொழில்களின் நலனுக்காக இந்தியாவில் வேறு இடங்களில் (வட நாட்டில்) உள்ள தொழில்களைச் 'சுரண்டுவதை' நான் ஆதரிக்க முடியாது;

"தென்னாட்டுத் தொழில்களுக்கு, இந்திய சர்க்கார் சில ஆண்டுகளுக்கு மானியத் தொகை வழங்க வேண்டும்; தென்னாட்டில் தொழில் துவங்குவோருக்கு இந்திய சர்க்கார், உற்சாக மூட்டுகிற வகையில் காரியங்கள் செய்ய வேண்டும்,"

—என்று, இந்துஸ்தான் வர்த்தகக் கழகத் தலைவரும், சென்னை 'ஷெரீபு'மான டி. சி. கோதாரி, பிரசிடென்சி கல்லூரி பொருளாதாரக் கழகத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் கர்த்தாக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் உள்ள அடிப்படை நோக்க வித்தியாசமெல்லாம், 'வாழ்க்கைக்குத் தேவையான சாதாரணப் பொருள்களை கிராம, கைத்தொழில்மூலம் உற்பத்தி செய்ய முடியும்' என, திட்டத்தின் கர்த்தாக்கள் நினைக்கின்றனர்—ஆனால், 'அந்தப் பொருள்கள் பெரிய, நடுத்தரத் தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டால், தொழில் பெருமளவு வளரும்; மேலும், பலவகையான தொழில்களும் ஒரேகாலத்தில் வளர முடியும்' என்று, வர்த்தகர்கள் கருதுகின்றனர்—என்பதில்தான்!

"மேலும், உற்பத்தி பெருகினால் மட்டும் போதாது; உற்பத்தியான பொருள்கள் எல்லாம் அழிய வேண்டும்; அதற்கு, மக்களின் வாங்கும் சக்தியும் அதிகரித்தாக வேண்டும்;

'கிராமக் குடிசைத் தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்களுக்கு, உற்பத்திக்கு ஏற்ப, விற்பனை ஏற்பாடுகள் அமையவில்லை."

'ரோமியோ-ஜூலியத்' காதலுக்கு மாசு கற்பிக்கிறார்கள்!

"தெருக்கள்தோறும் அலைந்து திரிகின்ற 'ரோமியோ'க்களை ஒழித்துக்கட்டிவிட்டால், தெரு ஓரங்களில் இருக்கும் 'ஜூலியத்'துக்களும் தாமாகவே மறைந்து விடுவர்,"

என்று, பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய், பம்பாய் தெருக்களில் விபசார ஒழிப்பு பற்றி, பிரதேச இளைஞர் காங்கிரஸ் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார்:—

"பாதை ஓரங்களில் திரிகின்ற 'ரோமியோ'க்கள் தோன்றுவதற்கு, ஹாலிவுட் படங்களோ, அல்லது இந்தியப் படங்களோதான் காரணமாக இருக்கும் என நான் கருதவில்லை; இளைஞர்களிடையே காணப்படுகின்ற இந்தப் பிடிவாத கெட்ட குணங்களைக் கடுமையாகக் கண்டிக்க வேண்டும்; அவர்களது போக்கை இனியும் சகித்துக் கொண்டிருக்க முடியாது என்பதை அந்த ரோமியோ'க்களுக்கும், 'ஜூலியத்'துக்களுக்கும் உணர்த்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்; அப்படி நடவடிக்கைகள் எடுத்தால், 'பாதையோர ரோமியோ'க்களுக்கு, 'ஜூலியத்'துக்கள் கிடைப்பது கடினமாகிவிடும்."

சென்னை சர்க்காரின் வழக்கமான பல்லவி!

ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த முடியாதாம்!

சென்னை சர்க்காரில் பணியாற்றும் 'லோயர் டிவிஷன்' குமாஸ்தாக்களின் ஊதியத்தை, மத்திய சர்க்காரில் அலுவல் புரியும் குமாஸ்தாக்களுக்குத் தரப்படும் ஊதியத்தின் அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று, அண்மையில் மாவட்ட நிர்வாகங்கள் பற்றிப் பரிசீலனை செய்த சுப்பிரமணியம் குழு செய்துள்ள சிபாரிசை நிராகரித்து, தற்போதுள்ள நிதி நிலைமையில் அச்சிபாரிசை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சர்க்கார் முடிவு செய்துவிட்டனராம்.

எனினும், நிலவரி இலாகாவில் பணியாற்றும் உயர்தர குமாஸ்தாக்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று செய்யப்பட்டிருந்த சிபாரிசை மட்டும் சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

சென்னை தொத்து நோய் மருத்துவமனை

சர்க்காரிடம் ஒப்படைக்கப்படும்?

சென்னை தண்டையார்பேட்டையில் நகரசபை நிர்வாகத்தின்கீழ் உள்ள தொத்துநோய் மருத்துவமனை, சில நிபந்தனைகளின் மீது சர்க்காரிடம் ஒப்படைக்கப்படலாம் என்று தெரிகிறது.

நகரசபை, அல்லது தனிப்பட்ட மருத்துவர்களால் சிபாரிசு செய்யப்பட்டுவரும் தொத்து நோய்க்காரர்கள் அனைவரையும். அந்த மருத்துவமனையில் அனுமதித்துக் கொள்ள சர்க்கார் ஒப்புதல் தர வேண்டும் என்பது அந்த நிபந்தனைகளில் ஒன்று என்றும் தெரிகிறது.

செயற்கை எண்ணெய் உற்பத்திச் சாலை

முடிவு மேற்கொள்ளவில்லையாம்

தேவையான அளவிற்குச் செயற்கை எண்ணெயை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை அமைப்பது என்று இந்திய சர்க்கார் பூர்வாங்க முடிவுகள் மேற்கொண்டிருப்பதாக மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் பதில் தரப்பட்டிருக்கிறது.

அந்தத் தொழிற்சாலை நிறுவுவது பற்றி இன்னும் இறுதியாக முடிவு செய்யப்படவில்லை என்று அமைச்சர் கே. சி. ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

'நிலமடந்தை நம்மை ஏளனம் செய்யும் நிலை மாற வேண்டாமா?'

பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் குறளுரை

சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் தமிழ் மன்றத்தைத் திறந்துவைத்து, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'வள்ளுவர் வகுத்த வாழ் நெறி' எனும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது ; பிற்பகுதி இங்கு தரப்படுகிறது :—

" மனிதனுக்குத் தேவையானது— எது எது நல்லதோ, அதனைக் காண்பதே அறிவுடைமையாகும்; ஒரு கத்தி இருக்கிறது— அந்தக் கத்தி, சுவைமிக்க மாம்பழத்தைச் சாப்பிட அரியவும் பயன்படும் ; அதே கத்தி, மற்றொருவனைக் குத்திக் கொலை செய்யவும் பயன்படும் ; கத்தியினால் மேற்கண்ட இரண்டு உபயோகத்தையும் நாம் அடையலாம் ; ஆனால், ' மனிதனை வெட்டுவதற்காகக் கத்தியை உபயோகிக்கலாமா ' என்று ஆராய்ந்து, 'கூடாது' என்ற உண்மைப் பொருள் கண்டறிந்து, அதன் மூலம் தீமை பயக்கும் செயல்களுக்கு அதனை உபயோகிக்காமல் இருப்பதே அறிவுடைமையாகும்.

" கருத்துக்கள் செல்லும் வழியிலெல்லாம் செல்லும் ; ஆனால் அவற்றில் நல்லதைக் காண்பதே அறிவாகும்,' என்றுதான் வள்ளுவர் கூறியிருக்கிறார்.

" 'மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள வேற்றுமை என்ன ?'—என்று கேட்டால், சாதாரணமாக, 'மிருகத்திற்கில்லாத ஒரு அறிவை —பகுத்தறியும் அறிவை — 'இது நல்லது, இது கெட்டது '—என்று தெரிந்துகொள்ளும் ஆற்றல் படைத்த ஆறுவது அறிவை மனிதன் பெற்றிருக்கிறான் ; அந்தப் பகுத்தறிவு மிருகங்களுக்குக் கிடையாது ; இதுதான் வேற்றுமை,'— என்ற பதில் கிடைக்கும்.

ஆனால், நாம் கூறுகிறோம்—' மிருகங்களுக்கும் பகுத்தறிவு இருக்கத்தான் செய்கிறது ; மனிதனுக்கு இருப்பதைப் போன்று அதிகமான அளவில் இல்லாவிடினும், மிகக் குறைந்த அளவிலேனும் அவை பகுத்தறிவு படைத்தவைகளாகவே இருக்கின்றன ; எனவே, பகுத்தறிவு தான், மனிதனுக்கும்—மிருகத்திற்குமுள்ள வேற்றுமை என்பது பொருந்தாதது,' என்று!

"உதாரணமாக, மிக முட்டாளான ஒரு மனிதனைவிட, ஒரு சாதாரண குரங்கு, அதிக அறிவும், ஆற்றலும் கொண்டிருக்கிறதாகக் கூறுகிறார்கள் ; ஆனால், மனிதனுக்கு இயற்கையிலேயே ஒரு அறிவு கிடைத்திருக்கிறது ; அதுதான் ஒழுங்குபடுத்தும் அறிவு. ஒரு பொருளை எடுத்துக்கொண்டால், 'இந்தப் பொருள் இப்படி இருக்கக் கூடாது ; இதனை மாற்றி அமைக்க வேண்டும்,'—அல்லது, ' இவ்வாறு இருப்பதை சிதைத்துவேறுஉருவத்தில் அதை அமைக்க வேண்டும் '— என்பது போன்ற மாற்றுதல், சிதைத்தல் ஆகிய ஒழுங்குபடுத்தும் அறிவைமனிதன்இயற்கையிலேயே பெற்றிருக்கிறான் ; இந்த ஒழுங்குபடுத்துகின்ற அறிவை மிருகங்கள் பெற்றில்லாததே மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள வேற்றுமையாகும்."

இவ்வாறு குறிப்பிட்டுவிட்டு, பொதுச் செயலாளர் மேலும் கூறினார் :—

" 'மக்கள் அனைவரும், ஒழுக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும்' —என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அவ்வாறு ஒழுக்கமுடன் நடந்துகொள்வதே மக்கட்பண்பு என்றும் கூறியிருக்கிறார் ; மக்கட்பண்பு என்று குறிப்பிடும்போது, வாய்மையையும் அதனுள் அடக்கிக் கூறியிருக்கிறார்; பொய் சொல்லாமல் இருப்பது மக்கட்பண்பின் சிறந்த ஒன்று.

" உலகில் மக்கள் அனைவரும் பொய்யே சொல்லாமல்—வாய்மையுடையவராக இருத்தல் இயலாது ; சிற்சில வேளைகளில் பொய்யும் உரைத்தே ஆகவேண்டும். நடந்தது—நடவாதது எதுவானாலும், பிறருக்குத் தீமை தாராதது ஆயின், அதுபோது பொய்யுரைக்கலாம் என்றே வள்ளுவரும் கூறியுள்ளார்.

" ஒரு குடிகாரன் இருக்கிறான் —தான் இரண்டுரூபாய் கொடுத்து சாராயம் வாங்கிவரச் சொல்லி அனுப்பிய தன் மகன், சாராயப் புட்டியுடன் திரும்புகையில், கால் இடறி கீழே விழுந்து, கையில் இருந்த புட்டி உடைந்து சாராயம் மண்ணோடு மண்ணாகக் கலந்துவிடுகிறது; அதனை குடிகாரனும் கண்டுவிடுகிறான் ; புட்டியை உடைத்த சிறுவனை தன் மகன்மீது தீராக் கோபம் கொள்கிறான் ; கத்தியை நீட்டி அவனைக் குத்தச் செல்கிறான் —தன் நிலைமறந்து—என்ன செய்யப்போகிறோம் என்ற அறிவு இல்லாதவனாக! தகப்பனுக்கு அஞ்சி சிறுவன் ஓடுகிறான்; மற்றொரு இடத்தில் ஒரு வீடு—அந்த வீட்டிலிருக்கும் முதியவரிடம் சிறுவன் சென்று, தன்னை அடைக்கலமாக அவரிடம் ஒப்புவிக்கிறான்; அவனுடைய பரிதாப நிலையைக் கண்ட முதியவர், அவனை மறைத்துவைக்கிறார் ; விரைவில், கத்தியுடன் ஓடிவந்த பையனுடைய தகப்பன், அம்முதியவரிடம் சென்று தனது சிறுவனைப் பற்றிக் கேட்கும்போது அம்முதியவர், அவனது மகனை தான் பத்திரமாக ஒளித்து வைத்திருப்பதாகவா கூறுவார்? இல்லையே! 'தமக்குத் தெரியாது' என்று சொல்லி அவனை அனுப்பி விடுவாரல்லவா ?

" குடிகாரனுடைய மகனை தன் வீட்டில் ஒளித்துவைத்து விட்டு அவனைப்பற்றிக்கேட்ட பையனது தகப்பனிடம், 'அங்கு பையன் இல்லை' என்றது பொய்தான் ; ஆனால், அவ்வாறு அவர் பொய் சொல்லி இராவிட்டால், அப்பையனை நிச்சயம் அவன் தகப்பன் கத்தியால் குத்திக் கொன்றிருப்பானல்லவா ? எனவே, தான், பிறருக்குத் தீங்கு நேரிடாத வகையிலோ—அல்லது ஏற்பட இருக்கும் தீங்கினைத் தவிர்க்கும் வகையிலோ பொய்யுரைத்தல் பாதகமில்லை என்றுதான் வள்ளுவர் கூறியிருக்கிறார். இதனை யார் ஒப்புக்கொள்ள முடியாது ? எந்த நாட்டவர் இதனை மறுக்க முடியும் ? எந்தக் காலத்திற்கு இது பொருந்தாது ?

" அதுபோலவேதான், அவர் காட்டியுள்ள ஒவ்வொரு வாழ்நெறியும், எல்லா மக்களுக்கும்—எந்த நாட்டவரானாலும், எல்லா காலத்திற்கும் ஏற்ற—பொருந்தக்கூடியவையாக இருக்கின்றன.

" இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்"

என்று கூறுகிறார் வள்ளுவர்.

" நமக்கு நேரிடுகின்ற இடுக்கண்களைக் காணுமிடத்து, அதற்காக வருந்தாமல், சிரிப்புடன் அதனை ஒதுக்கித் தள்ள வேண்டுமென்று அறிவுரை கூறுகிறார்; ஆனால் நம் நாட்டிலோ, முகத்தில் சிரிப்பின் ரேகையே இல்லாதவர்கள் இருக்கிறார்கள். இடுக்கணுறுங்காலை, மகிழ்ச்சியுடனிருப்பதை விடுத்து கவலையுற்று சோம்பிக் கிடக்கின்றோம்; சோம்பிக் கிடக்கின்ற நம்மைப் பார்த்து, நிலமடந்தை ஏளனம்செய்கிறாள்.

" மற்ற நாடுகளை நாம் எடுத்துக் கொண்டால், அங்கே மனிதர் இருக்கின்றனர்— அவர்களிடத்தில் அறிவு— இருக்கிறது — அவர்களிடம் பொருளும் இருக்கிறது; அவைகள் மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருக்கின்றன. நம் நாட்டிலும் அறிவு பொருள்—மனிதர் இருக்கத்தான் இருக்கிறது; ஆனால், அம்மூன்றிடையேயும் தொடர்பு இல்லை; ஒவ்வொன்றும் தனித்தனியே இருக்கின்றன ; எனவேதான், சோம்பிக் கிடக்கும் நம்மைப் பார்த்து நிலமடத்தை ஏளனம் செய்கிறாள்."

ஆலய சிற்பக் கலை...

பயிற்சியளிக்க சர்க்கார் முடிவு !

மகாபலிபுரத்தில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 'ஆலய சிற்ப'ப் பயிற்சிக்கூடம் ஒன்றை ஆரம்பிக்க சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம்.

சிற்பத் துறையில் நோக்கம் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிப்பதே அப்பள்ளியின் நோக்கமாம் அப்பள்ளி கட்டும் வகைக்காக ரூ 50,000 ஒதுக்கப்படுமாம் !

மேற்கண்ட இத்தகவலை சென்னை மாநில விவசாய அமைச்சர் பக்தவத்சலம், சென்னைக்கு அருகில் உள்ள ஆண்டார் குப்பம் கிராமத்தில் நடைபெற்ற கோயில் மின்சார விளக்கு ஏற்றும் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்,

" ஆலய சிற்பம் ஒரு புராதன கலையாகும் ; ஆகவே, அந்தப் புராதனக் கலையை அழிய விட்டு விடாமல், அவற்றைப் புதுப்பித்து, அவைகளின் 'புராதனப் பெருமை'யை பாதுகாக்க வேண்டும் என்பதே சர்க்காரின் கருத்து," என்று அவர் கூறியிருக்கிறார்.

மேலும், ஒளி, 'தெய்வீகத்' தன்மையில் ஒரு முக்கியமான அம்சம் என்றும், ஆகவே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி கிடைத்துவிடும் என்றும் கூறியிருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி

ஏமாற்றப்படவில்லையாம் !

வாஷிங்டன், ஆக. 11—

சோவியத் பாதுகாப்பு மந்திரி ஜுகோவின் மகள் திருமணத்திற்கென, அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர், ' நால்வர் ' மாநாட்டின் போது, ஜினீவாவில் பரிசு வழங்கியதை ஒட்டி ஜுகோவிற்கு மகள் இருப்பதே தெரியவில்லை என்றும், குருஷ்சேவ் வேடிக்கைக்காகக் கூறியதை ஐசனோவர் நிஜமென நம்பி ஏமாந்துவிட்டதாகவும், வெளிவந்த செய்தியினை அமெரிக்க இராஜாங்க இலாகாவினர் மறுத்துவிட்டிருக்கின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஏமாற்றப்படவில்லை என்றும், ஜுகோவிற்கு குறைந்தது இரண்டு பெண்கள் உண்டு என்றும், அவருக்கு பேரன் பேத்திகள்கூட இருக்க வேண்டும் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

கோரிக்கை நிராகரிப்பு?

புதுடில்லி, ஆக. 11—

பிற்பட்ட வகுப்புக் குழு அறிவித்த அறிக்கை பற்றிய இந்திய சர்க்காரின் முடிவு இத்திங்கள் இறுதிக்குள் வெளியிடப்படுமாம்.

சட்ட சபையில் பிற்பட்ட வகுப்பினருக்கும் இடங்கள் ஒதுக்கித்தர வேண்டும் என்ற கோரிக்கையை குழு, நிராகரித்துவிட்டதாம்.

ஆனாலும், அந்த வகுப்பினரிடையே நிலவுகின்ற பிற்பட்ட நிலைமையைப் போக்க, அவர்களுக்கு அதிகக் கல்விச் சலுகைகளும், வேலை வாய்ப்புகளும் அளிக்க வேண்டுமென்று அக்குழு சிபாரிசு செய்திருக்கிறதாம்.

முன்னாள் போலீசார் போராட்டம்!

அநியாயமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டாராம் !

சர்க்கார் அலுவலகத்தின்முன் சத்தியாக்கிரகம்

திருவனந்தபுரம், ஆக. 10—

ஒரு முன்னாள் போலீஸ்காரர் சர்க்கார் அலுவலகத்தின்முன், தனக்குப் பாக்கிச் சம்பளம் தரப்பட வேண்டும் என்றும் தன்னை மீண்டும் வேலையில் வைத்துக் கொள்ளவேண்டும் என்றும், கோரி 'போராட்டம்' துவக்கியிருக்கிறார் என்று தெரிகிறது.

தான் அநியாயமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கூறிய அவர், சர்க்கார் அலுவலக வாயிலில் மூவர்ணக் கொடி, தன் கோரிக்கைகளை பொறித்த அட்டை ஆகியவற்றுடன் நின்றுகொண்டு 'சத்தியாக்கிரகம்' துவக்கியிருக்கிறார்.

சவாராவில் உள்ள தாதுப் பொருள் நிறுவனம் ஒன்றினைச் சேர்ந்த நான்கு தொழிலாளர்களும், நிறுவனத்தின் கதவடைப்பு நடவடிக்கைக்கு முடிவு கட்ட வேண்டும் என்று கோரி, 'போராட்டம்' துவக்கியுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

பாக். புதிய பிரதமர் கொள்கை விளக்கம்

40 - இலட்சம் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்க முடியாதாம்!

" இந்தியத் துணைக்கண்டத்தின் பொருளாதார முன்னேற்றமும், அரசியல் நிலையும் உறுதியாக நிலைத்திருக்கவேண்டுமானால், இந்தியாவும், பாகிஸ்தானும் ஒன்றுக்கொன்று ஒத்துழைக்க வேண்டும்,"

என்று, புதிய பாக். பிரதமர் சௌத்ரி முகமதலி, வானொலியில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

" பாகிஸ்தான் நாட்டை எதிர்நோக்கியிருக்கும் மிகப் பெரிய— அவசரமான பிரச்சினை, ' காஷ்மீர் பிரச்சினையில் இறுதியான முடிவு மேற்கொள்ளப்பட வேண்டும்,' என்பதேயாகும் " என்றும் அவர் கூறியிருக்கிறார்

' காஷ்மீர் பற்றி இந்தியா— பாகிஸ்தான் ஆகியவற்றிடையே இருந்துவரும் தகராறுகள் விரைவில் நீங்கப் பெறுமாயின், அது, பொதுவாக உலகம் முழுமைக்கும் மட்டுமல்லாமல், குறிப்பாக இந்தியா-பாகிஸ்தான் ஆகியவற்றிற்கும் நன்மை பயப்பதாகும் ' என்றும் கூறியிருக்கிறார்.

" காலவரையறை எதுவும் இல்லாமல், காஷ்மீரில் வாழ்ந்து வருகின்ற சுமார் 40 லட்சம் மக்களுக்கு, அவர்களுடைய சுயநிர்ணய உரிமையை மறுத்துக் கொண்டிருக்க முடியாது," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இத்தகராறு எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் நீக்கப்பட்டு பைசல் செய்யப்படுகிறதோ அந்த அளவு விரைவிலேயே இந்தியா— பாக். நட்புறவும், மற்ற உறவுகளும் ஏற்பட்டு நீடித்து நிலைத்து நிற்கும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பாகிஸ்தானின் உள்நாட்டுக் கொள்கை பற்றி அவர் பேசுகையில், ' சிறிதளவுகூட காலதாமதம் செய்யாமல் அரசியல் திட்டத்தைத் தயாரிப்பதுதான் மிக அவசர—அவசியமான காரியம் என்றும், அது விரைவிலேயே பொதுத் தேர்தலை நடத்துவதற்கான வழிவகைகளை எடுத்துக்காட்டும்," என்றும் குறிப்பிட்டார்.

" பல்லாண்டுகளாக அலட்சியம் செய்யப்பட்டு துன்புற்று வருகின்ற கிழக்கு வங்கத்தை 'பிரத்தியேக'மாகக் கவனிக்க வேண்டும்," என்றும், அம்மாநிலத்தின் வெள்ள நிவாரணத்திற்காக ரூ 25 லட்சம் மானியமாகத் தரப்படும் என்றும் அறிவித்திருக்கிறாராம்.

நாடு கடத்தப்பட்ட அமெரிக்கர்

உண்ணாவிரதம் மேற்கொண்டார்

ஹாங்காங், ஆக. 11—

அர்னால்ட் மில்டன் பின் என்ற 40 வயது அமெரிக்கரை, ஹாங்காங் போலீசார், காவலிலிருந்து விடுதலை செய்திருக்கின்றனர்.

அவரை நாடு கடத்தி சர்க்கார் தந்த உத்தரவை எதிர்த்து அவர் சிறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டதாகவும், 5 நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதமிருந்ததால் சீர்கெட்டுப்போன அவர், உடல் நிலையைச் சீர்செய்ய மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அவர் இப்போது விடுவிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், அவரை காலனியிலிருந்து வெளியேற்றி அனுப்ப கப்பல் எதும் இல்லாததே என்றும், போக்குவரத்து வசதி கிடைத்ததும் அவர் நாடு கடத்தப்படுவார் என்றும் கூறப்படுகிறது.

அவர் நாடு கடத்தப்பட்டிருப்பதற்கான காரணங்கள் எதும் கூறப்படவில்லை.

தனக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கிற நாடு கடத்தல் உத்தரவு திரும்பப் பெறப்படுகிற வரையில், தொடர்ந்து, தான் உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக அந்த அமெரிக்கர் அறிவித்திருக்கிறாராம்.

'சட்ட ரீதியாகவே சுதந்திரம் பெறுவோம்'

மலேயாவில் முதன் முதலாக நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்ற மூவர் கூட்டணியின் தலைவரான தெங்கு அப்துல் ரஹ்மான் தலைமையில் உருவாகியுள்ள 15-பேர்களடங்கிய மந்திரி சபை பதவியேற்றிருக்கிறது.

வானொலியில் பேசிய முதன் மந்திரி ரஹ்மான், சட்டரீதியாகவே மலேயாவிற்கு சுயாட்சியும், சுதந்திரமும் பெற்றுத் தர தன் மந்திரி சபை உறுதி பூண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆறு மலாயர்கள், ஐந்து ஐரோப்பியர்கள், மூன்று சீனர்கள், ஒரு இந்தியர் கொண்ட தன் மந்திரி சபையில் ஒற்றுமையும், கூட்டுப் பொறுப்பும் நிலவிடும் என்றும், மந்திரி சபைக்கும்—பிரிட்டிஷ் கமிஷனருக்கும் இடையே நல்லுறவு நிலவ மந்திரிசபை பாடுபடும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கம்யூனிஸ்டுகளுக்கு பொதுவான மன்னிப்பு வழங்குவது, மக்களின் ஆசை அபிலாஷைகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்யும் வண்ணம் புதியதொரு தேசியக் கல்விமுறையை வகுப்பது, தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சித்தல், கிராமங்களுக்கு விசேஷமாகவும், நகரங்களுக்குப் பொதுவாகவும் மருத்துவ—சமூக—க்ஷேமலாப அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளுவது முதலியன பற்றிய சர்க்கார் கொள்கைகளையும் அவர் விளக்கியிருக்கிறார்.

இந்தோனேஷியாவில் புதிய மந்திரி சபை.

இந்தோனேஷியாவில், முஸ்லீம் ஆதிக்கம் கொண்ட வலதுசாரி மஸ்ஜுமி கட்சி, புதிய கூட்டு மந்திரி சபையை அமைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

டாக்டர் அலி சஸ்திரோமித் ஜோஜோவின் முன்னாள் அமைச்சரவை, இராணுவ காரியாலய அதிகாரி ஒருவரின் நியமனத்தை இராணுவம் புறக்கணித்ததின் விளைவாக பதவியைவிட்டு விலகவேண்டிய நிலைமை ஏற்பட்டது நினைவிருக்கலாம்.

தற்போது ஏற்பட்டுள்ள புதிய கூட்டு அமைச்சரவையில் தேசியவாதிகளும், கம்யூனிஸ்டுகளும் கிடையாதாம்.

வருகிற செப்டம்பர் திங்கள் 29-ந் தேதியன்று இந்தோனேஷியாவில் பொதுத் தேர்தல் நடைபெறுமாம்.

மாணவர்கள் மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்!

பாட்னாவிலுள்ள பீகார் தேசியக் கல்லூரிக்கு முன்னர், மாணவர் கூட்டத்தின்மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக ஒரு மாணவர் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி உயிர் நீத்தார் என்று செய்தி ஒன்று கிடைத்துள்ளது.

ஆனால், அந்த துப்பாக்கிப் பிரயோகத்தினால் 3 மாணவர்கள் பலியாயினர் என்றும் மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

மாணவர் கூட்டம், போலீஸ் அதிகாரி ஒருவரைச் சூழ்ந்து கொண்டு அவரைத் தாக்க முற்பட்டதாகவும், தற்காப்பிற்காக அந்த அதிகாரி, துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மாநில சர்க்காருக்குச் சொந்தமான பிரயாணிகள் பஸ் ஒன்றில் பிரயாணம் செய்த மேற்படி கல்லூரியைச் சேர்ந்த 3 மாணவர்களை, அந்த பஸ் கண்டக்டரும், டிக்கெட் பரிசோதகரும் தாக்கிக் காயம் விளைவித்ததாகவும்அதனையொட்டி கல்லூரி மாணவர்களுக்கும்—பஸ் தொழிலாளர்களுக்குமிடையே மோதுதல் ஏற்பட்டு, நகரில் ஆபத்தான நிலைமை நிலவிவந்ததாயும், முன்னர் ஒருமுறை போலீசார் தெரிவித்திருந்தனராம்.

இந்நிகழ்ச்சியையொட்டி, மேற்படி கல்லூரிக்கு அருகிலிருந்த சர்க்கார் போக்கு-வரத்து இலாகா கிடங்கு ஒன்றை, கல்லூரி மாணவர்கள் இரண்டு தடவை தாக்க முற்பட்டதாகவும், உயர்தரப் போலீஸ் அதிகாரியின் முன்னிலையிலேயே மாணவர்கள் பஸ் தொழிலாளரைத் தாக்கினதாகவும், அப்பொழுது போலீசார், கண்ணீர்ப் புகை, தடியடிப் பிரயோகங்களை மேற்கொண்டு மாணவர்களைக் கலைத்தனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

போலீஸ் லாரிக்குத் தீ!

இன்று காலை, மேற்படி மாணவர்கள், போலீஸ் லாரி வண்டியொன்றுக்குத் தீயிட்டதுடன், அவ்வண்டியில் இருந்த 10 போலீஸ் கான்ஸ்டபிள்களைத் தாக்கியதாகவும், தாக்குண்ட போலீசாரில் இருவரின் நிலை கவலைக்கிடமளிப்பதாக இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சிகள் குறித்து, பாட்னா நகரிலுள்ள காந்தி மைதானம், எஞ்சினீயரிங் கல்லூரி ஆகியவற்றிடையேயுள்ள பகுதிகளில் 144 ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

இன்று நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமான விவரத்தை பீகார் தேசியக் கல்லூரி மாணவர்கள் தெரிவிக்கையில், அங்குள்ள மற்றொரு கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களை, அவர்கள் கல்லூரியைவிட்டு வெளியே வரச் செய்வதற்காக தாங்கள் ஊர்வலம் நடத்தியதாகவும், அந்த ஊர்வலம் கல்லூரிக்கு அருகில்—மேற்படி போக்குவரத்து இலாகாவின் கிடங்கிற்கு அருகாமையில் சென்றபோது, அங்கு காவல் இருந்த போலீசார் கண்ணீர்புகைப் பிரயோகமும், தடியடிப் பிரயோகமும் செய்தனர் என்றும் கூறியிருக்கின்றனராம்.

கோவா எல்லையில் இந்தியத் துருப்புக்களாம்!

கோவா, ஆக. 12—

கோவா எல்லைக்குச் சில கல் தூரத்தில் உள்ள லோந்தா எனும் இடத்தில் 1,000 இந்தியத் துருப்புகள் தயாராக இருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதென்று, கோவா கவர்னர்-ஜெனரல்அறிவித்திருக்கிறாராம்!

கோவா எல்லையில் நிறுத்தப்பட்டிருந்த போர்ச்சுகீசிய இராணுவ, போலீஸ் படைகள் எல்லைக்குள் 3 மைல் தூரம் கொண்டுபோகப் பட்டுள்ள என்றும் தகவல் கிடைத்துள்ளதாம்.

இளைஞர் பலி!

சென்ற 10-ந் தேதியன்று, பஞ்சிம் போலீஸ் காவலில் இருந்த 16 வயதுடைய இளைஞர் ஒருவர், போலீசார் அவரது இடுப்பில் எட்டி உதைத்ததினால் அவதியுற்று உயிர் நீத்தார் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

10 ஆண்டு சிறைத் தண்டனை!

'இந்திய தேசிய, கோவா விடுதலை இயக்கத்தவருக்கு உதவி செய்தார்' என்ற குற்றத்திற்காக, அப்பாஸ் தாவூத் மொஹையதீன் என்ற கோவா போலீஸ் கான்ஸ்டபின் ஒருவர், போர்ச்சுகீசிய சர்க்காரால் 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பெற்றுள்ளாராம்.

டாமனை அழித்துவிட்டுதான் வெளியேறுவராம்!

இந்திய சுதந்திர தினமாகிய இத்திங்கள் 15-ந் தேதியன்று, கோவா எல்லையில், கிளர்ச்சி செய்வதற்காக இந்திய சத்தியாக்கிரகிகள் கூட்டம் கூட்டமாக வந்துள்ளனராம்; எனினும் 3,000 பேர்களுக்கு அதிகமாக கோவா பிரதேசத்திற்குள் நுழைய அனுமதிக்க முடியாது என்று கோவா விடுதலைக் குழு தீர்மானித்துள்ளதாம்.

இதனிடையே கோவா எல்லையோரப் பகுதிகளில் போர்ச்சுகீசிய இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கான வேலைகள் மிக துரிதமாக நடைபெற்று வருவதாகவும், டையூவிலும் இன்று 144 ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

டாமன் பகுதியிள்ள அதிகாரிகள், 'டாமனை அழித்துவிட்டுத்தான் நாங்கள் வெளியேறுவோம்' என்று பயமுறுத்தியுள்ளனராம்.

பம்பாயில் நடைபெற்ற கோவா அனுதாப ஊர்வலத்தில், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டனராம். லாரிகளில் தொண்டர்கள் ஏற்றிச் செல்லப்படுவதற்கு பம்பாய் சர்க்கார் தடை விதித்துள்ளனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இறைஞ்சினர்! கெஞ்சினர்!

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

மக்கள் தொகை அடிப்படை மட்டுமின்றி, திட்டங்களின் முக்கியத்துவம், வருமான வழிவகைகள் போன்றவற்றையும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று திட்டக் குழுவினர் கருத்தறிவித்திருக்கின்றனர்.

திட்டக் குழுவின் செயலகம், சென்னைக்கு ரூ. 165 கோடி பெறுமான திட்டம் மட்டுமே அங்கீகரிப்பது என்று ஏற்கனவே முடிவுக்கு வந்திருக்கின்றதாம்.

திட்டக் குழு ஆலோசகர், நியமிக்கப்பட்டிருக்கிற பல வேலைக் குழுக்கள் சென்னை சர்க்காரின் திட்டம் பற்றித் தரும் 'ஆராய்ச்சிக் கருத்து'க்களை மனதில் கொண்டு, தனது சிபாரிசுகளை நாளைய மறுதினம், திட்டக் குழுவிடம் தாக்கல் செய்வாராம்!

போராட்ட வீரர்களை சுட்டுவிழ்த்த உத்தரவு

போர்ச்சுகீசியர் வெறிப்போக்கு!

மாலை முதல் காலை வரை டாமன் பகுதியில் ஊரடங்குச் சட்டத்தினைப் பிறப்பித்திருக்கிறார்களாம்.

கோவா விடுதலைக் குழுவினர், வரும் ஆகஸ்டு 15-ந் தேதியன்று பெரிய அளவில் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்ததை ஒட்டி இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

மேலும், கோவா எல்லைக்குள் நுழைவோரைக் கண்டதுமே சுட்டு வீழ்த்துமாறு இராணுவத்தினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஆகஸ்டு 15-ந் தேதியன்று கோவாவில் நடைபெற இருக்கும் சத்தியாக்கிரகத்தைத் தடுத்துவிட வேண்டுமென்று, போர்ச்சுகீசிய அயல்நாட்டமைச்சர், இந்திய சர்க்காருக்கும், உலக மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளாராம்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொண்டுவிட்டதாயும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

★

மே.வங்கதிட்டம்

ரூ. 265 கோடி மதிப்புடையது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கென மேற்கு வங்க மாநில சர்க்கார் தயாரித்துள்ள இறுதித் திட்டம் ரூ. 265 கோடி மதிப்புடையதாகும்.

★

உ. பி. திட்டம்

ரூ. 750 கோடி மதிப்புடையது உத்திர பிரதேச மாநில சர்க்கார் இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கென தயாரித்துள்ள நகல் திட்டம் சுமார் ரூ 750 கோடி மதிப்புடையதாகும்.

ஓர் அறிவிப்பு

இயக்கத் தோழர்கள் கவனத்திற்கு

"இந்தி கமிஷன் விஷயமாக, தேசியப் பத்திரிகைகளில் வந்துகொண்டிருந்த செய்திகளை வைத்து எழுதப்பட்ட ஒரு கருத்தினை 'எண்ண'த்தில் தாங்கி, 'தென்றல்' 13—8—55 இதழின் சில பிரதிகள் தபால் மூலம் மட்டும் சில ஊர்களுக்குசென்று விட்டன; கமிஷன் வரும் நோக்கம் பற்றிய சில தேசியப் பத்திரிகைகளின் தவறான வியாக்கியானத்தாலும், சில தவறான செய்திகளாலுமே அது நேர்ந்தது;

"இரயில்வே மூலம் பெரிய ஊர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள பிரதிகளில் காணப்படும் 'எண்ணம்' தான் சரியானது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்;

"தோழர்கள் திருத்திக் கொள்ள வேண்டுகிறோம்."

கண்ணதாசன்,
ஆசிரியர், 'தென்றல்'

ஜி. பராங்குசம் தந்தையார் மறைவு

திருச்சி, ஆக. 12—

பொன்மலைத் தோழர் ஜி. பராங்குசம் அவர்களது தந்தையார் திரு. குருசாமி நேற்றிரவு இயற்கை எய்தினர் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தந்தையை இழந்து தவிக்கும் பராங்குசம் அவர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்குகிறோம். (ஆ-ர்.)

தி.மு.க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன்

அருப்புக்கோட்டை வருகை

14—8—55 மாலை 2 மணிக்கு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அருப்புக்கோட்டை வருகிறார். அன்று மாலை, புஷ்ப மாளிகையில் நடைபெறும் இராமநாதபுர மாவட்ட தி. மு. க. பொதுக் குழுக் கூட்டத்திலும், ஊர் வலத்திலும், சௌந்திரபாண்டியனார் படிப்பக ஆண்டு விழாவிலும், இரவு, தியாகராய வாலிபர் சங்கத்தின் முன்பாக நடைபெறும் தி. மு. கழக வரவேற்பு, நிதியளிப்புப் பொதுக் கூட்டத்திலும் கலந்துகொள்வார்.

* * *

நகர சபை வரவேற்பு

14—8—55 மாலை 5 மணிக்கு, அருப்புக்கோட்டை நகராட்சி மன்றத்தின் சார்பில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, நகராட்சி அலுவலகத்தில், நல்வரவேற்பு தருவதென, அருப்புக்கோட்டை நகரசபையினர்ஒருமனதாக முடிவு செய்திருக்கின்றனர்.

கழகக் கூட்டங்கள்

★

சல்லிப்பட்டி

முத்தேலம்மன் திடலில்
15—8—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
கி. மனோகரன்
வி. சண்முகநாதன்

★

வேட்டைக்காரன்புதூர்

மோடி மேட்டில்
16—8—55 மாலை 7 மணிக்கு
பேசுவோர்:
கி. மனோகரன்
வி. சண்முகநாதன்

தொழிலாளர் பொதுக்கூட்டம்

15—8—55 மாலை 6 மணிக்கு, சென்னை-பெரம்பூர், திரு.வி.க. திடலில், சென்னை தொழிலாளர் சங்கச் சார்பில், தோழர் எஸ்.சி.சி.அந்தோணிப் பிள்ளை தலைமையில் நடைபெறும். தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் எஸ்.பக்கிரிசாமி, சி. என். நாராயணன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 10-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

14—8—55 காலை 10 மணிக்கு, சென்னை-எண் 179, போர்ச்சுகீஸ் சர்ச் தெருவிலுள்ள தோழியர் சத்தியவாணிமுத்து இல்லத்தில், சென்னை 10-வது வட்ட தி. மு கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, 'வட்ட நிலை' என்பது பற்றி ஆராயப்படும்

சைதாப்பேட்டை (சென்னை) தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

14—8—55 மாலை 6½ மணிக்கு, சைதாப்பேட்டை(சென்னை) தி.மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழக இல்லத்தில் நடைபெறும். அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் பரிசீலிக்கப்படும்.

பெயர் சூட்டு விழா

14—8—55 மாலை 4 மணிக்கு, சென்னை-குயப்பேட்டை, எண் 75, வெங்கடாத்திரி நாய்க்கன் தெருவில், சகுந்தலா சாம்பசிவன் மகவுக்கு, தோழர் க. அன்பழகன் அவர்களால் பெயர் சூட்டு விழா நடைபெறும்.

நெல்லை மாவட்டத்தில் அண்ணாதுரை

★

"16-8-55 முதல் 21-8-55 வரை, நெல்லை மாவட்டத்தில், தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் சுற்றுப்பயணம் செய்வார். தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு கிளைக் கழகங்களுக்கும் நான் தெரிவித்த குறிப்புப்படி ஏற்பாடு செய்துவிட வேண்டும். எக்காரணங் கொண்டும் அவைகளைக் கூட்டவோ, குறைக்கவோ கூடாது,"

என, நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அறிவித்துக் கொள்கிறார்.

குறள் வகுப்பு

14—8—55 காலை 10 மணிக்கு, சென்னை-மண்ணடி,எண் 94—95, புதுத் தெரு, இராசமன்னார் பாடசாலையில், திருவள்ளுவர் இளைஞர் கழகச் சார்பில் நடைபெறும். திரு. சி. முருகேசனார் விளக்கவுரை யாற்றுவார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

14—8—55 காலை 10½மணிக்கு, திருச்சி, எண் 1, பெரிய செட்டித் தெரு, பாண்டியன் படிப்பகத்தில், 'நாடும்-ஏடும்' என்ற பொருள் குறித்து, தோழர்கள் சு. அருணகிரி, தி. ரா. தருமராசன், தி. ச. செயராமன் ஆகியோர் பேசுவர்.

திருச்சி திருவள்ளுவர் மன்ற பொது உறுப்பினர்கட்கு

14—8—55 காலை 9 மணிக்கு, திருச்சி, சின்ன செட்டி தெரு, சித்தி விநாயகர் ஆலயத்தில், திருவள்ளுவர் மன்ற பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, வரவு-செலவு கணக்கு, மன்ற வளர்ச்சி, முதல் ஆண்டு விழா ஆகியவை பற்றி ஆராயப்படும்.

'மீண்டும் வருமா?'—நாடகம்

14—8—55 மாலை 6¼ மணிக்கு, சென்னை அண்ணாமலை மன்றத்தில், திருக்குறள் வி. முனுசாமி அவர்கள் தலைமையில், 'மீண்டும் வருமா?' நாடகம் நடைபெறும். கதை, வசனம்: உமாசந்திரன்; பாடல்கள்: கே. எஸ். மூர்த்தி; பயிற்சி: சி. டி. டி. அரசு; எம். முத்து குழுவினரின் இசைஅமைப்பும், தோழியர் மீனலோசனியின் பின்னணி இசையுடன் கூடியது; கட்டணம்: ரூ. 5, 3, 2, 1.

'அவமானச் சின்னம்' நாடகம்

சென்னை நடிப்புப் புலவர் நாடகக் கழகத்தார் நடிக்கும் 'அவமானச் சின்னம்' (ஆசிரியர்: ஏ. எஸ் வேணுதீட்டியது) என்ற நாடகம் செயின்ட்மேரி மண்டபத்தில் 14—8—55 மாலை 6–30 மணிக்கு, தோழர் க. அன்பழகன் முன்னிலையில் நடைபெறும்.

விவசாயிகளுக்கு இலவசமாக உரம்

ஆந்திர சர்க்கார் யோசனை

காளஹஸ்தி, ஆக. 12—

விவசாயிகளுக்குத் தேவையான தழை உரமும், விறகும் இலவசமாக வினியோகம் செய்வது பற்றி மாநில சர்க்கார் உத்தேசித்து வருவதாக ஆந்திர தனை முதல் அமைச்சர் சஞ்சீவி ரெட்டி அறிவித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.